**செ. கு. எண்**:237 **நாள்**:04.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.7.2012

சென்னை மாவட்டம், கோட்டை தண்டையார்பேட்டை, கிழக்கு சிமெட்ரி சாலை, குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் வசிக்கும் திரு. ராமச்சந்திரன் என்பவரின் மகன் செல்வன் வசந்த் **3.7.2012** அன்று தனது விட்டு அருகே விளையாடிக் கொண்டிருந்த போது, அருகே உள்ள காவல் நிலைய மையத்தின் கதவை தொட்ட போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த வசந்த் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத் துயரச் சம்பவத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது காவல் துறை காவலர் திரு.பாலகிருஷ்ணன் படுகாயம் அடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும் இவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செல்வன் வசந்த் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த காவல் துறை காவலர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு **25,000/-** ரூபாயும் முதலமைச்சரின்பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**